தனமல்விலை பிரதேச சபை - 2023

-------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தனமல்விலை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

தனமல்விலை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை வெளியிடவில்லை. இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது மறுப்பு அபிப்பிராயமொன்று வழங்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 <u>கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)</u>

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 <u>ஏனைய சட்டத் ்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை</u>

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 <u>நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்</u>

1.6.1 <u>கணக்கீட்டுக் கொள்கைகள்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் பொழுது சபையினால் பின்பற்றப்பட்ட இருப்புக் கணக்கெடுப்பு, வருமானங்களை இனங்காணல் மற்றும் நடைமுறையிலுள்ள வேலைத்திட்டங்கள ஆகியவற்றை கணக்கீடு செய்வதுடன் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீட்டுக் கொள்கையினை வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதுடன் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படல் வேண்டும் |

1.6.2 <u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் வேலை நிறைவு செய்யப்பட்ட 02 நிர்மாணங்களுடன் தொடர்பான ரூபா. 12,595,688 காணி மற்றும் கட்டடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இத் தொகையை கணக்கீடு செய்வதாக | வேலைகள் நிறைவு செய்யப்பட்ட நிர்மாணங்களின் பெறுமதி மூலதனப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) நிலையான சொத்துக்கள் பதிவேடுகளில் உள்ளடங்கியிருந்த ரூபா. 15,000,000 பெறுமதியான டங்கும பொதுச் சந்தை, ரூபா. 200,000 பெறுமதியான தாமரைக் குள நீர்ப்பாசனத் திட்டம் மற்றும் ரூபா. 800,000 பெறுமதியான ஆனந்தகம நீர்ப்பாசனத் திட்டம் காணி மற்றும் கட்டடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சபைக்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களினதும் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று மூலதன உள்ளீட்டுக்கான வருமானப் பங்களிப்பு ரூபா. 1,834,191,813 ஆகவிருந்த போதும் ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் கீழ் ரூபா. 1,845,256,295 ஆக காட்டப்பட்டிருந்தமையால் மீதிகளுக்கிடையில் ரூபா. 11,064,482 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இக் கணக்கு மீதிகள் மற்றும் அட்டவணைகளை ஒப்பிட்டு மீதிகளுக்கிடையிலான வித்தியாசத்தினை சீர் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா. 380,989 குறைவாக நூலகப் புத்தகக் கணக்கிற்கு கொண்டுசெல்லப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் இத் தவறை சீர் செய்வதாக | சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் பெறுமதிகள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா. 147,000 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் இத் தவறை சீர் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும் |
| (ஊ) | மீளாய்வாண்டின் பொது நிர்வாக வேறு வருமானங்கள் ரூபா. 886,141 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் இத் தவறை சீர் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும் |
| (எ) | சுகாதார சேவைகள் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா. 807,296 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் இத் தவறை சீர் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும் |
| (ஏ) | மீளாய்வாண்டில் பௌதிக சேவைகள் மற்றும் வேறு வருமானங்கள் ரூபா. 372,000 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் இத் தவறை சீர் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும் |
| (ஐ) | பௌதிக சேவைகள் மூலதன நன்கொடைகள் ரூபா. 59,269,425 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும் |
| (ஒ) | மீளாய்வாண்டில் நலன்புரி சேவைகளுடன் தொடர்பான உபகரணச் செலவினம், காணி அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா. 59,565,837 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும் |
| (ஓ) | பிரதேச அபிவிருத்தி உதவியாளர் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ரூபா. 34,222,115 மற்றும் அதனூடாக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2024ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும |

| | | |
|---|---|---|
| (ஔ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி நிதி செயலாற்றல் கூற்று மேலதிகம் ரூபா. 25,879,718 ஆக இருந்த போதும் அது தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் ரூபா. 15,769,987 என ரூபா. 10,109,731 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2024ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும |

### 1.6.3 இணக்கமடையா கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கணக்கீட்டு விடயங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளுக்கிடையில் ரூபா. 50,366,865 வித்தியாசம் காணப்பட்டது | குறித்த பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளை மேலும் பரிசீலித்து இத் தவறினை விரைவாக சீர் செய்வதாக | பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் நாளது வரையாக்கப்பட்டு இணக்கமடையாமைக் கான காரணங்களை இனங்கண்டு சீர் செய்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப் பெறுமதி ரூபா. 1,717,502,186 ஆகவிருந்த 08 சொத்து விடயங்கள் மற்றும் 02 பொறுப்பு விடயங்கள் தொடர்பான அட்டவணைகள், நிலையான சொத்து பதிவேடுகள், மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் உரிமைப் பத்திரங்கள் ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமான முனைப்பழிவினை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிலையான சொத்து பதிவேடுகள், ஏனைய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் நாளதுவரையாக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகள் எழுத்து மூல சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | |
| (i) 19 (xii) பிரிவு | தனமல்விலை பேரூந்துத் தரிப்பிடத்தில் அமைந்துள்ள 03 கடைகள் 2007 முதல் 30 வருடங்களுக்காக குத்தகைக்கு விடப்பட்டிருந்த போதும், அதற்கான விடயப் பொறுப்பு அமைச்சரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக விடயப் பொறுப்பு அதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (ii) 24 (1) பிரிவு | சபையின் மூலம் பேணப்பட்டு வருகின்ற பாதைகள் தொடர்பான தொகைப்புத்தகத்திற்கு அமைவாக சபைக்குச் சொந்தமான 256 வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை | வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதாக | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களைக் கடந்திருந்த ரூபா. 1,708,680 பெறுமதியான 21 வைப்பு மீதிகள் விடுவிக்கப்பட்டிருக்க வில்லை. | இம் மீதிகள் தொடர்பில் ஆராய்ந்து எதிர்காலத்தில் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுவதாக | நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) 1978 இன் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 83(1) பிரிவு | 2016 முதல் 2020 வரை அனுமதிக்கப்பட்டிருந்த 80 கட்டட வரைபடங்கள் பரிசீலிக்கப்பட்டு இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மேற்பார்வை நடவடிக்கைகளை மேலும் முறைமைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் கட்டட நிர்மாண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் வேண்டும் |
| (ஈ)2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை. | சபையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்ற வீதி விளக்குகள் தொடர்பான கணக்கெடுப்பு நடத்தப்படாதிருந்ததுடன் வீதி விளக்கு ஒளியூட்டல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலைப் பெற்று தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படல் வேண்டும் |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 23,211,085ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,360,922 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 60,000 | 140,000 | 140,000 | - | 50,000 | 162,500 | 162,500 | - |
| (ii) வாடகை | 13,420,720 | 1,959,950 | 1,538,178 | 421,772 | 13,190,170 | 1,772,700 | 8,102,426 | (6,329,726) |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,051,580 | 1,051,580 | 1,679,586 | (628,006) | 1,235,465 | 1,235,465 | 1,390,595 | (155,130) |
| (iv) ஏனைய வருமானம் | 87,711,407 | 87,711,407 | 10,867,803 | 76,843,604 | 58,270,788 | 58,270,789 | 2,274,129 | 55,996,660 |
| | 102,243,707 | 90,862,937 | 14,225,567 | 76,637,370 | 72,746,423 | 61,441,454 | 11,929,650 | 49,511,804 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வீதவரி மற்றும் வரி**<br><br>முன்னைய ஆண்டுடன் தொடர்பான சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடுதல் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா. 12,079,268 மற்றும் மீளாய்வாண்டில் 06 சொத்துக்களை குத்தகைக்கு விடுதல் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா.199,324 ஆகிய தொகைகள் திசெம்பர் 31ஆம் திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவீடு செய்தல் வேண்டும் |
| **வாடகை**<br>மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா. 2,077,350 ஆகவிருந்த கடை வாடகை வருமானத்தில் ரூபா. 540,250 அதாவது 26 வீதம் நிலுவையாக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவீடு செய்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| <u>**வேறு வருமானங்கள்**</u><br>(அ) 2015 – 2023 காலப்பகுதியுடன் தொடர்பான நீர் வாடிக்கையாளர்கள் 537 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 1,593,342 ஆகவிருந்த நிலுவை நீர்க் கட்டணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய நிலுவைகளை அறவிடுவதற்காக வருமானப் பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவீடு செய்தல் வேண்டும |
| (ஆ) 2014 – 2023 காலப்பகுதியுடன் தொடர்பான வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை வாடகைக்கு விடுதல் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா. 2,996,970 ஆகவிருந்த நிலுவை இயந்திர வாடகை வருமானம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவீடு செய்தல் வேண்டும் |
| (இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. 9,793,006 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 2,484,655 அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிறுவனங்களுக்கு எழுத்து மூல அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் விரைவில் நிலுவைக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவீடு செய்தல் வேண்டும |

**2.3 மிகை அறவீடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய வருடங்களில் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகள் தொடர்பில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா. 52,608 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | தவணைக் கட்டண முறையில் குறித்த தொகை அறவிடப்பட்டு வருவதாக | மிகை அறவீடுகள் விரைவில் அறவீடு செய்யப்படல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| • 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆனந்தகம மற்றும் நெலும் வெவ நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் வழங்கப்படும் நீர் குடிப்பதற்கு உகந்ததா என்பது தொடர்பான தரப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனடிப்படையில் 1987இன் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 78ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நீருக்கான தரப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதாக | குடிநீரின் உயர் தரம் தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபைக்குச் சொந்தமான சூரியஆர கடைகள் அமைந்துள்ள இடத்தில் சட்டவிரோதமாக 03 கடைகள் அமைக்கப்பட்டிருந்ததுடன் இச் சட்டவிரோத நிர்மாணிப்புகள் தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் கடை உரிமையாளர்களுடன் கலந்துரையாடி வாடகை அடிப்படையில் இக் கடைகளை சபைக்கு கையேற்புச் செய்து ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் இடம்பெறும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) சபைக்குச் சொந்தமான 14 காணிகளினதும் 94 மயானங்களினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்கனவே காணிகள் மற்றும் ஒருசில மயானங்களை அளவை செய்வதற்காக கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் ஏனைய காணிகளை கையேற்புச் செய்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாக | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ)2023 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்றிருந்த 04 அலுவலக உபகரணங்கள் மற்றும் 02 நீர்த் தாங்கிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024ஆம் ஆண்டு அப் பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்தி மட்டத்தினைக் கருத்தில் கொண்டு முன்னேற்றமடைந்த பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி மற்றும் வரி பிரகடனம் செய்து கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்கனவே இதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | முன்னேற்றமடைந்த பிரதேசங்களுக்கான வீதவரி மற்றும் வரி பிரகடனம் செய்யப்பட்டு கட்டணம் அறவிடப்படல் வேண்டும் |
| (ஆ) 2023 ஆம் ஆண்டு சபைக்குச் சொந்தமான 11 இடங்களில் அமைந்துள்ள 42 கடைகள் 03 வருடகால வாடகை அடிப்படையில் வாடகைக்கு விடப்படும் பொழுது குறைந்த கேள்வி விலையை தீர்மாணிப்பதற்காக தொழில்சார் மதிப்பீட்டாளர்கள் மூலம் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறையாக மதிப்பீடு செய்து வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கடைகளின் பெறுமதிகள் தொடர்பில் முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| (இ) சபைக்குச் சொந்தமான 06 இடங்களில் அமைந்துள்ள 61 கடைகளுடன் தொடர்பான மாதாந்த வாடகைத் தொகையினைத் தீமாணிக்கும் பொழுது தொழில்சார் மதிப்பீட்டாளர்களது சேவை பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறையாக மதிப்பீடு செய்து வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கடைகளின் பெறுமதிகள் தொடர்பில் முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சூரியஆர இல. 01 முதல் 07 வரையிலான கடைகளுடன் தொடர்பான 2014ஆம் ஆண்டின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை அறவிடப்பட்டு வந்ததுடன் கடை வாடகை மதிப்பீட்டினை புதுப்பித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறையாக மதிப்பீடு செய்து வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கடைகளின் பெறுமதிகள் தொடர்பில் முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| (உ) | 2023 பெப்ரவரி 06ஆம் திகதி சபைக்குச் சொந்தமான 42 கடைகள் கேள்வி அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்டிருந்த போதும் அவற்றில் 09 கடைகள் தொடர்பில் வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில் லை. அதேபோன்று இதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா. 3,173,000 ஆரம்பத் தொகை 2024 பெப்ரவரி 05ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை விரைவில் அறவிடுவதாக | குறித்த தொகைகள் முறையாக அறவீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | பிரதேச சபையின் மூலம் வாடகைக்கு விடப்பட்டிருந்த 31 கடைகளின் வாடகை ஒப்பந்தங்களின் செல்லுபடியாகும் காலம் கடந்து 01 முதல் 09 வருடங்களைத் தாண்டியிருந்த பொதும் வாடகை ஒப்பந்தங்களை புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் வருடத்தினுள் புதிய மதிப்பீட்டிய் அடிப்படையில் அனைத்து கடைகள் தொடர்பிலும் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை வாடகைக்கு விடும் பொழுது அந் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும் |

## 3.4 கருத்து முரன்பாட்டுக்கு வழிவகுக்கும் கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| • தனமல்விலை பிரதேச சபைக்குச் சொந்தமான டங்டும வார சந்தைக்கு அருகில் இல. 05 மற்றும் இல. 06 கடைகள் 2019ஆம் ஆண்டு வாடகைக்கு விடப்பட்டிருந்த அதேவேளை அதன்போது பெறுகைகள் கேள்வித் தொகையில் 50 வீதமாகிய ஆரம்பத் தொகை ரூபா. 1,500.200 இனைச் செலுத்தியதாக கடைகளை வாடகைக்கு விடுவதுடன் தொடர்பான கோவைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அத் தொகை சபை நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த தொகை சபை நிதியத்தில் வரவு வைக்கப்படவில்லை என பரிசோதனையின் போது உறுதியாவதுடன் இது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | குறித்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஆராய்ந்து பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அறவீடு செய்தல் வேண்டும் |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 03 வாகனங்களின் சட்டரீதியான உரிமை பிரதேச சபைக்கு கையேற்கப்படவில்லை. | வாகனங்களின் சட்டரீதியான உரிமையினை விரைவில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் சட்டரீதியான உரிமை கையேற்கப்படல் வேண்டும் |
| (ஆ) தனமல்விலை பிரதேச சபைக்குச் சொந்தமான 22 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படாதிருந்ததுடன் அவற்றில் 07 வாகனங்களுக்கான பதிவுச் சான்றிதழும் பெறப்பட்டிருக்கவில்லை. 10 | இப் பிரச்சினையை விரைவில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | குறித்த காலத்தினுள் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்கள் தொடர்பில் 01 முதல் 22 வருடங்கள் வரையிலான காலத்திற்கான வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | பிரதேச சபைக்குச் சொந்தமான 08 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் 01 முதல் 18 வருட காலமாக செயற்பாடின்றிக் காணப்படுவதுடன் குறித்த வாகனங்களை திருத்தம் செய்து பாவிப்பதற்கோ அல்லது கழிவு நீக்கம் செய்யவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் வாகனங்கள் தொடர்பில் தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதாக | செயற்பாடின்றிக் காணப்படும் வாகனங்களை திருத்தியமைத்து பயன்படுத்துவதற்கோ அல்லது கழிவு நீக்கம் செய்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சேவனகலையில் அமைந்துள்ள திண்மக் கழிவு முகாமைத்துவ அலகுக் கட்டடம், ஹலர் இயந்திரம் மற்றும் ஆமாட்டர் மற்றும் வாழை நெட்டி வெட்டும் இயந்திரம் பயன்பாடற்றுக் காணப்படுகின்றன. | காணப்படும் ஏனைய செயன்முறைப் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொண்டு விரைவில் உர உற்பத்தியினை மேற்கொள்வதற்கு எடுப்பதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் உயர் வினைத்திறனுடன் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (உ) | சபை நிதியத்தின் மூலம் ரூபா. 1,967,506 செலவில் 2019ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட நுகேகலயாய வாராந்த சந்தை பூமியில் அமைந்துள்ள 03 கடைகள் 2023ஆம் ஆண்டு இறுதி வரை பயன்பாடற்றுக் காணப்பட்டன. | பல சந்தர்ப்பங்களில் இக் கடைகளுக்கான கேள்வி மனு கோரப்பட்ட போதும் யாரும் விண்ணப்பிக்காததன் காரணமாக வாடகைக்கு விடுவதற்கு முடியாது போனதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் வினைத்திறனுடன் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | சபைக்குச் சொந்தமான கப் வண்டியின் என்ஜின் இலக்கம் 4D56DE9507 ஆகும். பதிவுச் சான்றிதழில் என்ஜின் இலக்கம் 4D56JN0914 என காட்டப்பட்டிருந்தது. | புதிய என்ஜின் பொருத்தப்பட்டமை தொடர்பான தகவல்கள் கோவையில் காணப்படாததன் காரணமாக இது தொடர்பான ஒரு முறையான பரிசோதனையை மேற்கொள்ளுமாறு | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் கவனம் |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளூராட்சி ஆணையாளரிடம் வேண்டுகோல் விடுக்கப்பட்டுள்ளதாக. | செலுத்தப்படல் வேண்டும். |
| (எ) | சபைக்கு சொந்தமான 02 டிரக்டர் வண்டிகளுக்கான பதிவுச் சான்றிதழ்கள் சபையிடம் காணப்படவில்லை. | இவ் வண்டிகள் சபைக்கு கிடைத்த விதம் தொடர்பான எந்தவொரு ஆவணமும் சபையிடம் காணப்படவில்லை என்பதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் சட்டரீதியான உரிமை உறுதிப்படுத்தப்ப டல் வேண்டும் |

**3.6 <u>பெறுகைகள்</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஜனவரி 25 ஆம் திகதிய தேசிய பெறுகைகள் முகவர் நிறுவனத்தின் சுற்றறிக்கை இல. 08 இன் 6.2.2 பிரிவிற்கு அமைவாக தேசிய போட்டி அடிப்படையிலான விலைக் கோரலின் பொது குறைந்தளவு 21 நாட்கள் வழங்கப்படல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2023ஆம் ஆண்டுக்காக சொத்துக்களை வாடகைக்கு விடுதல் தொடர்பில் கேள்வி மனுக்களை சமர்ப்பிப்பதற்காக 14 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகளை குறைத்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்ப டல் வேண்டும். |

**3.7 <u>ஒப்பந்த நிருவாகம்</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 தேசிய பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் வேலைகளை நிறைவு செய்வதற்கு உள்ள சாத்தியப்பாடு தொடர்பில் காணப்படும் திருப்தியடையும் பட்சத்தில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு | எதிர்காலத்தில் இத் தொகையை மீளச்செலுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | நிர்மாண நடவடிக்கைகள் முறைப்படுத்தப்ப ட வேண்டியதுடன் வெளிப்பாட்டுத்த |

| | | |
|---|---|---|
| ரூபா. 200,000 அதிகூடிய கொடுப்பனவுத் தொகைக்கு உட்பட்டு முற்பணம் வழங்க முடியும். எனினும் அதற்கு முறனாக தலபத்கம சனசமூக நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஒரு சங்கத்திற்கு ரூபா. 399,247 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. 2024 பெப்ரவரி 02ஆம் திகதி வரை அம் முற்பணத் தொகை மீளச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | ன்மையுடையதாகவும் இருத்தல் வேண்டும். |

## 3.8 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபையின் 04 பதவிகள் தொடர்பான 06 உத்தியோகத்தர்களுக்கான குறைபாடு காணப்பட்டதுடன் 02 பதவிகள் தொடர்பான 02 உத்தியோகத்தர்கள் மேலதிகமாகக் காணப்பட்டனர். | குறித்த விடயம் தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் புதிய ஆட்சேர்ப்புகள் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக வெற்றிடங்களை பூரணப்படுத்தப்பட வில்லை என்பதாகவும் உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு குறித்த தகவல்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் | உத்தியோகத்தர் குறைபாடுகளை பூரணப்படுத்துவதற்கும் மேலதிக உத்தியோகத்தர்களின் பதவிகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 09 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 1 வருடத்திற்கும் மேலாக அறவிடப்படாமல் இருந்த ரூபா. 298,279 கடன் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இப் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஊழியர் கடன் மீதிகள் விரைவில் அறவிடப்படல் வேண்டும் |

## 4 கணக்களி தன்மையும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41(1) பிரிவு மற்றும் 2019 ஜனவரி 12 திகதிய டீஎம்ஏ/01-2019 இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு வழிகாட்டல் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறையாக கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்களை நடாத்துவதற்கு எதிர்பார்ப்பதாக | குறித்த சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக் |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை, ஆண்டின் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 7 வருமானத் தலைப்புகளின் 11 சதவீதம் முதல் 133சதவீதம் வரையிலும் 06 செலவுத் தலைப்புகளின் 14 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான விலகல்கள் காணப்பட்டன. இதனடிப்படையில் பாதீடு ஆக்கபூர்வமான | எதிர்காலத்தில் பாதீட்டினைத் தயாரிக்கும் நடவடிக்கைகளை மேலும் தாத்வீகமான முறையில் மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக | வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளை மேலும் தாத்வீகமாக தயார் செய்வதுடன் அதன் இலக்குகளை அடைந்துகொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | |
|---|---|---|
| முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | வேண்டும். |

**4.2 <u>சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள்</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் செவனகலையில் நடாத்தப்பட்டு வருகின்ற திண்மக் கழிவு முகாமைத்துவ அலகிற்கான சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்படாதிருந்ததுடன் இவ்வலகு ஆரம்பிக்கப்பட்டு 13 வருடங்கள் கடந்திருந்த போதும் சேதனப் பசளையை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக காணப்படும் பிரதான பிரச்சினைகளை தீர்த்துக்கொண்டு சேதனப் பசளையை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்ப்பதாக | கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும் |